**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 458/2023**

திரு. செந்தில்குமார் (P.W. –1) **13.3.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் டையிங் தொழில் செய்து வருகிறேன். ரத்தனசாமியை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 2023 ம் வருடம் இதிலிருந்து தெரியும். அதற்கு முன்பு தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவிற்கு தான் தெரியும். ரத்தினசாமியை எப்படி தெரியும் என்றால் அவருக்கும் என்னுடைய தகப்பனாருக்கும் வரவு செலவு இருந்தது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 20.10.2008 ஆம் தேதி நானும் ரத்தினசாமி மற்றும் பலர் மீது ஏற்பட்ட கிரையாவணம் என்றால் சரி. அது **பி.வா.சா.ஆ–1.** அவ்வாறு கிரயம் பெற்ற சொத்தை ஐஸ்வர்யா கார்டன் என்று பெயரிட்டு மனைகளாக பிரித்து கிரயம் ஏற்பட்ட நபர்கள் சேர்ந்து விற்பனை செய்தோம் என்றால் சரி.

2. அந்த சொத்தை விற்பனை செய்வதற்காக ரத்தினசாமியை ஒரு பொது அதிகார முகவர் ஆக நியமனம் செய்தோம் என்றால் சரி. அதன் அடிப்படையில் என்னுடைய தகப்பனார் ஒரு மனை கிரயமாக பெற்றுள்ளார் என்றால் சரி. அந்த பொது அதிகார ஆவணம் இன்று வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரி. (இந்த இரண்டு கேள்விகளுக்கும் இந்த தாவாவிற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் இவை நிராகரித்து உத்தரவிடப்படுகிறது.) **பி.வா.சா.ஆ–1** ஆவணத்தின் படி அந்த ஆவணம்

ஏற்பட்ட 2000 ஆம் வருடத்தில் இருந்தே இரண்டாம் பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரி. ஆனால் எனக்கு ரொம்ப அறிமுகம் இல்லை. அவர் நன்கு அறிமுகமான நபர் என்பதால் தான் அவரோடு சேர்ந்து கிரைய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரி.

3. 2ம் பிரிவாதி சீட்டு நடத்திய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி குமரேசனை எப்போது இருந்து எனக்கு தெரியும் என்றால் 2023 ஆம் வருடத்தில் இருந்து தெரியும். தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி வாதி பெயருக்கு பாதுகாப்பிற்காக ஒரு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தது எப்போது தெரியும் என்றால் 2023 ம் வருடம் தெரியும். தாவா சொத்தை பொறுத்து 2009 ம் வருடம் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் என் தகப்பனார் பெயரில் ஒரு கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை எத்தனை முறை பார்வையிட்டேன் என்றால் ஒரு முறை பார்த்து உள்ளேன். அதில் யார் வசித்து வருகிறார் என்றால் 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார். தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பு வில்லங்க ஆவணம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்கத்தில் என் தகப்பனார் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவண விபரங்கள் உள்ளது என்றால் ஆமாம். அதன் விவரங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தின் விவரங்களை நான் தாவாவில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4. 1ம் பிரதிவாதி சீட்டு போட்ட சமயத்தில் பாதுகாப்பிற்காக ஏற்படுத்திய பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தான் என் தகப்பனார் பெயரில் நிறைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டது. அந்த ஆவணம் மோசடியானது என்றால் தவறு. சீட்டு கணக்குகள் முடித்துக் கொண்ட பிறகு 1ம் பிரதிவாதி

பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார ஆவணத்தையும் என் தகப்பனார் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்த போது அவருக்கு தெரியாமல் மோசடியாக தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளீர்கள் என்றால் தவறு. பொது அதிகார ஆவணத்தில் ரத்து செய்த போது கொடுக்கப்பட்ட Life certificate ல் ஒன்னாம் பிரதிவாதியின் கையொப்பம் மாறுபடுவதாக சொன்னதால்தான் அன்றைய தினம் ஒன்னாம் பிரதிவாதி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்தார் என்றால் சரியல்ல.

5. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட விபரமே ஒண்ணாம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் தவறு. முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்ட சமயத்தில் ஒன்றாம் பிரதிவாதியும் ஒரு ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லி உள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்ட தேதியில் ஒண்ணாம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருக்கும் போது நேரடியாக அவரிடமே கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பம் பெற்று இருக்கலாம் என்றால் தவறு. கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட முன் தொகை ரூபாய் 2 லட்சத்தை ரெண்டாம் பிரதிவாதியிடம் தான் கொடுத்தேன் என்றால் தவறு, ஒன்றாம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். முன் தொகை ரூபாய் 2 லட்சத்தை நான் என்ன 2 ம் பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

6. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு அனுப்பிய மறு அறிவிப்பு மற்றும் வழக்குரையில் முன் தொகையை இரண்டாம் பிரதிவாதியிடம் கொடுத்ததாகத்தான் குறிப்பிட்டுச் சொல்லி உள்ளேன் என்றால் தவறு. முன்

தொகை கொடுத்ததற்கான ரசீது 1ம் பிரதிவாதி கொடுத்ததாக வாதுரைத்துள்ளேன். அந்த ரசீதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.பொது அதிகார ஆவணம் நீக்கரவும் செய்த சமயத்தில் வெற்று தாளில் ஒன்றாம் பிரிதிவாரி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை. ரெண்டு லட்சம் ரூபாய் முன் தொகை எதுவும் ஒண்ணாம் பிரதிவாதி பெற்றுக் கொள்ளவில்லை. தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த ரசீதையும் ஒன்றாம் பிரதிவாதி ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. ஒண்ணாம் பிரதிவாதி எதிர்வழக்குரை சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரி. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் மற்றும் என் தகப்பனார் பேரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் இரண்டிலும் சாட்சி கையப்பம் செய்த நபர்கள் ஒரே நபர்கள் என்றால் சரி.

7. தாவா சொத்திற்கு உரிய 2003 ம் வருடம் அசல் கிரைய ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரி. அந்த ஆவணத்தை ரெண்டாம் பிரதிவாதி தான் என்னிடம் கொடுத்தார் என்றால் தவறு. ஒன்றாம் பிரதிவாதி தான் கொடுத்தார். தவறாக சாட்சியம் அளிக்கிறேன். ஒண்ணாம் பிரதிவாதி அவருடைய சொத்துக்கான அசல் கிரைய பத்திரத்தை பாதுகாப்பிற்காக சீட்டு போட்ட போது இரண்டாம் பிரதிவாதியிடம் தான் கொடுத்திருந்தார் என்றால் தவறு. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரைய செய்து கொடுக்க தயாராக இல்லை. 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து மோசடியாக கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக 1ம் பிரதிவாதி கிரய ஒப்பந்த ஆவணம் எதுவும் ஏற்படுத்தி தர இரண்டாம் பிரதிவாதியிடம் அறிவுறுத்ததில்லை. அவ்வாறு எந்த ஆவணங்கள் ஏற்படுத்தினாலும் ஒண்ணா பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

தாவாவுடன் எதிர்கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டது. அதை கோப்புக்கு எடுக்கப்படவில்லை. ஆகையால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN
Date: 2025.03.13 18:46:33
+0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.